டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 24.06.2026 புதன்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 006 - Madurai | Online Edition

## ஹார்முஸ் நீரிணையை கடந்து வரும் கப்பல்களால்

# வலுவடையும் நாட்டின் உர இருப்பு

புது தில்லி, ஜூன் 23

இந்தியாவின் உரத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில், யூரியா, டிஏபி மற்றும் சல்பர் ஏற்றிய நான்கு சரக்குக் கப்பல்கள் ஹார்முஸ் நீரிணையை வெற்றிகரமாகக் கடந்து, இந்தியாவின் கிருஷ்ணபட்டினம், காக்கிநாடா, பாரதீப் மற்றும் முந்த்ரா துறைமுகங்களை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. இவை நாட்டின் உர இருப்பை மேலும் வலுப்படுத்தும்.

2026, ஜூன் 22 நிலவரப்படி, இந்தியாவின் ஒட்டுமொத்த உர இருப்பு 196.08 லட்சம் டன்களாக உள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலக்கட்டத்தில் இருந்த 168.67 லட்சம் டன்களை விட அதிகம். நடப்பு மார்ச் 1 முதல் ஜூன் 21 வரை உரங்களின் விற்பனை 153.4 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது, இது கடந்த ஆண்டை விட 13.2 லட்சம் டன் அதிகமாகும், இது நாட்டின் விவசாய வளர்ச்சியைப் பறைசாற்றுகிறது.

உலகளாவிய சந்தை அதிர்வுகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க, அரசு உள்நாட்டு உற்பத்தியை 133.12 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்தியுள்ளது. இதனுடன் 43.69 லட்சம் மெட்ரிக் டன் உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

மேலும், காரீஃப் பருவத்திற்காக 90 லட்சம் டன்னுக்கும் அதிக மான யூரியா மற்றும் பி&கே உரங்கள் உலகளாவிய ஒப்பந்தங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளன. ஓமன், ரஷ்யா, எகிப்து உள்ளிட்ட 28 நாடுகளுடனான தூதரக ஒருங்கிணைப்பு மூலம் இந்த உர விநியோகச் சங்கிலி தடையின்றி உறுதி செய்யப்பட்டுள்ளது.

உரத் துறையானது மாநில அரசுகள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளுடன் இணைந்து, இந்தியாவின் விவசாயத் தேவைகளைத் தடையின்றிப் பூர்த்தி செய்யத் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

# காரீப் பருவ விவசாயிகளுக்கு நிலக்கடலை விதைகளை வழங்கி வேளாண்மை இணை இயக்குநர் அறிவுரை



புதுக்கோட்டை, ஜூன் 23

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டாரத்தில் செயல் படுத்தப்பட்டு வரும் வேளாண் திட்டங்கள் குறித்து புதுக்கோட்டை, வேளாண்மை இணை இயக்குநர் சுந்தர மகாலிங்கம் ஆய்வு மேற்கொண்டார்கள்.

அன்னவாசல் வட்டாரத்தில் காரீப் பருவத்தில் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகளுக்கு நிலக்கடலை விதைகளை வழங்கி வேளாண்மை இணை இயக்குநர் கூறியதாவது, தேசிய உணவு எண்ணெய்வித்து இயக்கத்தின் கீழ் மதிப்பு தொடர் தொகுப்பு திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டருக்கு 150 கிலோ வீதம் விவசாயி களுக்கு மானியத்தில் நிலக்கடலை விதைகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சாகுபடி செய்து விளைவிக்கப் படும் விளைபொருட்களை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங் களுக்கு விவசாயிகள் வழங்கிடவே இத்திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

அவ்வாறு விவசாயிகள் விளைவிக்கப்பட்ட பொருட்கள் மதிப்பு கூட்டி உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் நுகர் வோருக்கு விநியோகம் செய்வதால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கும் என தெரிவித்தார்கள். அதன் தொடர்ச்சியாக விவசாயிகளிடையே விவசாயிகள் பதிவு (Farmer Registry) செய்து விவசாய அடையாள எண் பெறுவதன் முக்கியத்துவம் குறித்தும், பிரதம மந்திரி கௌரவ நிதி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயனடையும் விவசாயிகள் அனைவரும் தங்களது விவரத்தினை (e KYC) பி.எம்.கிசான் வளைத்தலத்தில் புதுப்பித்திட அறிவுறுத்தினார்கள். மேலும் அன்னவாசல் வேளாண்மை உதவி இயக்குனர் மதியழகன், நிலக்கடலை பயிர் சாகுபடி, விதை நேர்த்தி ஜிப்சம் இடுதல், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்தும் தெரிவித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# கால்நடை வளர்ப்பு மற்றும் மரபுசார் மருத்துவப் பயிற்சி



சேலம், ஜுன் 23

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், கிழக்கு ராஜா பாளையம் கிராமத்தில், அட்மா திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்பு மற்றும் மரபுசார் மருத்துவப் பயிற்சி முகாம் நடைபெற்றது. இப்பயிற்சி முகாமிற்கு துணை வேளாண்மை அலுவலர் மணவழகன் தலைமை தாங்கினார். அவர் விவசாயிகளுக்கு அசோலா வளர்ப்பு மற்றும் ஊறுகாய் புல் தயாரிப்பது குறித்து பட விளக்கங்களுடன் பயிற்சி அளித்தார்.

சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற கால்நடை மருத்துவர் பிரபாகரன், பால் பண்ணை தொழிலில் மரபுசார் கால்நடை மருத்துவ முறைகளின் முக்கியத்துவம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். குறிப்பாக, மாடுகளுக்கு வரும் மடிவீக்க நோய், கோமாரி நோய் மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற நோய்களை சோற்றுகற்றாழை, மஞ்சள், பூண்டு மற்றும் சுண்ணாம்பு போன்ற வீட்டுச் சமையலறைப் பொருட்களைக் கொண்டு செலவில்லாமல் குணப்படுத்தும் முறைகளை விளக்கினார்.

இந்த மூலிகை மருத்துவ முறைகள் மூலம் பாலில் இரசாயனக் கலப்பு இல்லாத தூய்மையான பால் உற்பத்தி செய்ய முடியும் என்றும், இதனால் மருத்துவச் செலவு பெருமளவு குறையும் என்றும் குறிப்பிட்டார். தொடர்ந்து, உதவி வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் வேளாண்மைத் துறையில் செயல் படுத்தப்பட்டு வரும் பல்வேறு அரசுத் திட்டங்கள் குறித்தும், பசுந்தாள் உரப் பயிர்களின் பயன்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கமளித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி, தீவனப் பயிர்கள் வளர்க்கும் முறைகள் குறித்துப் பேசினார்.

இப்பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி தொழில் நுட்ப மேலாளர் முத்துவேல் செய்திருந்தார். இதில் கிழக்கு ராஜா பாளையம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## ஊட்டச்சத்து பானங்கள்

**ஆரஞ்சு சாறு**

**தேவையான பொருட்கள்**

ஆரஞ்சு – 2

சர்க்கரை – 1–2 தேக்கரண்டி (விருப்பப்பட்டால்)

ஐஸ் கட்டிகள் – சிறிதளவு (விருப்பப்பட்டால்)

**செய்முறை**

1.ஆரஞ்சை பிழிந்து சாறு எடுக்கவும்.

2.விருப்பப்பட்டால் சர்க்கரை சேர்த்து கலக்கவும்.

3.ஐஸ் கட்டிகள் சேர்த்து பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# தென்னையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி




மதுரை, ஜூன் 23 மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை ATMA 2026-27 ஆம் ஆண்டு மேலமாத்தூர் கிராமத்தில் தென்னையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம், தலைமையில் நடைபெற்றது.

தென்னையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி பாரதப் பிரதமரின் கௌரவ நிதி உதவி மற்றும் விழிப்புணர்வு முகாம் மற்றும் விளைநிலம் காப்போம் Khet Bachao Abhiyan கேத் பச்சோ அபியான் இயக்கத்தின் மூலம் சமச்சீரான உரப் பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் குறித்தும் விளக்கம் அளித்தார். துரை பாஸ்கர், தென்னையில் ஒருங் கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி செயல் விளக்கத்துடன் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். துணை வேளாண்மை அலுவலர் அழகேசன் விவசாய அடையாள அட்டை எண் பதிவேற்றம் செய்தல் துறை சார்ந்த மானியத் திட்டங்கள் குறித்து கூறினார். மேலமாத்தூர் கிராமம் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

இம்மாவட்ட அளவிலான விவசாய பயிற்சி தொழில்நுட்ப மேலாளர் அழகர் மற்றும் மகாலட்சுமி ஏற்பாடு செய்திருந்தனர் . இப்பயிற்சிக்கு ஏற்பாடுகளை செய்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா நன்றியுரை வழங்கினார்.

# உழவர் அலுவலர் தொடர்பு திட்டம் (யுஏடிடி 2.0)



அரியலூர், ஜுன் 23

அரியலூர் மாவட்ட வேளாண்மை மற்றும் சகோதரத்துறைகள் ஒருங்கிணைப்பு கூட்டம் வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி தலைமையில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் வாலாஜா நகரத்தில் 23.6.26 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை துணை இயக்குனர் (தோட்டக்கலைத் துறை) பாலமுருகன் மற்றும் வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண் வணிகத்துறை) பச்சையம்மாள் மற்றும் அனைத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குனர்கள், தோட்டக்கலை உதவி இயக்குனர்கள், வேளாண்மை அலுவலர்கள் உதவி வேளாண்மை அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின்படி உதவி வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகத்துறை) பயணத் திட்டத்தின்படி நான்கு நாட்கள் (திங்கள் முதல் வியாழன்) தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராமத்திற்கு சென்று வேளாண்மை மற்றும் சகோதர துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை அனைத்து விவசாயி களுக்கு தெரியப்படுத்திட அறிவுறுத்தப்படுகிறது. பயிர் சாகுபடி பரப்பு எவ்வித விடுபாடும் இன்றி ஒத்திசைவு செய்திடவும், பயிர் அறுவடை பரிசோதனைகள் உரிய காலத்தில் மேற்கொள்ளவும், நில உடமை பதிவேற்றம், மின்னணு பயிர் கணக்கீடு மற்றும் பயிர் காப்பீடு பணிகளை எவ்வித தொய்வின்றி செயல்படுத்திட அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும் அனைத்து அலுவலர்களும் கிராமங்களில் பயணம் செய்யும்போது அப்பகுதியில் பயிரிடப்பட்ட அனைத்து வகையான பயிர்களின் நிலை, கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள், பூச்சி நோய் தாக்குதல் நிலவரங்கள் ஆகியவற்றை தெரிந்து கொள்ள வயலாய்வு மேற்கொண்டு உரிய தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு தெரிவித்திட வேண்டும் எனவும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் கிராமங்களுக்கு பயணம் மேற்கொள்ளும் பொழுது வானிலை முன்னறிவிப்பு பற்றிய விபரங்களை விவசாயிகளுக்கு தெரிவித்திட வேண்டும். கிராம அளவில் அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு தொடர்பு மையத்தினை நிர்ணயம் செய்திட வேண்டும். வேளாண்மை பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படும் மத்திய மாநில அரசு திட்டங்களுக்கான பயனாளிகளை அந்தந்த வட்டார உதவி

பொறியாளர் தேர்வு செய்யும் பொழுது உதவிட வேண்டும். வேளாண்மை சகோதரத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களை விவசாயிகள் பெற்றிட அதற்கான இருப்பு வைக்கப்பட்டுள்ள இடுபொருட்களை உரிய காலத்தில் விவசாயிகளுக்கு வழங்கிட வழிவகை செய்ய வேண்டும். அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பழ செடிகள், தென்னை மரக்கன்றுகள், காய்கறி விதைகள் மற்றும் மதிப்பு கூட்டும் பொருள்கள் ஆகியவற்றை நிர்ணயிக்கப்பட்ட இலக்கின் படி விவசாயிகளுக்கு வழங்கிட அறிவுறுத்தப்படுகிறது. முடிவில் வேளாண்மை உதவி இயக்குனர் பொறுப்பு வகிக்கும் த.ஜென்சி நன்றி உரை வழங்கினார்.




# விதைப்பரிசோதனை நிலைய செயல்பாடுகள் - ஒரு பார்வை

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்'

– என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப உலகத்திற்கே அச்சாணியாய் விளங்கும் உழவர்களுக்கு உறுதுணையாய் அமையும் வகையில் தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்யும் உன்னத பணியாற்றுவது விதைப்பரிசோதனை நிலையத்தின் உயரிய நோக்கமாகும். மதுரை, நாகமலை புதுக்கோட்டையில் தமிழ்நாடு அரசு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் கீழ் விதைப்பரிசோதனை நிலையம் 1970ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இங்கே ஒரு விதைப்பரிசோதனை அலுவலர், இரு வேளாண்மை அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

மதுரை, விதைப்பரிசோதனை அலுவலர் தலைமையில் தேனி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை, இராநாதபுரம் விதை ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன.

**விதை மாதிரிகள் வகைகள் மற்றும் சான்று விதை மாதிரி**

சான்று விதை மாதிரி எனப்படுவது விதை உற்பத்தியாளர்கள் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் கீழ் விதைப் பண்ணைகள், பதிவு செய்து விதைச்சான்று அலுவலர் களால் கள ஆய்வு செய்யப்பட்டு உரிய வயல் தரங்கள் பராமரிக்கப் படுவதை உறுதி செய்து அறுவடை செய்த விதைகளை அரசு அங்கீகாரம் பெற்ற விதை சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்தி செய்து விதைப்பரிசோதனைக்காக விதை ஆய்வகத்திற்கு விதைச்சான்று அலுவலர்களால் அனுப்பி வைக்கப்படும் மாதிரியாகும்.

**ஆய்வாளர் விதை மாதிரி**

ஆய்வாளர் விதை மாதிரி என்பது தமிழ்நாடு அரசு விதை ஆய்வாளர்களால் அரசு, அரசு சார்பு, தனியார், விவசாயிகள் என அனைத்து விதமான விதை விற்பனை நிலையங்களிலிருந்தும் தரக் கட்டுப்பாட்டினை நோக்கமாகக் கொண்டு எடுத்து சமர்ப்பிக்கப் படும் மாதிரியாகும்.

**பணி விதை மாதிரி**

பணி விதை மாதிரி என்பது விவசாயிகள், தனி நபர், விதை விற்பனையாளர்கள், விதை உற்பத்தியாளர்கள் தங்களிடமுள்ள

விதையின் தரத்தினை அறிந்து கொள்ள சமர்ப்பிக்கும் மாதிரி யாகும். அனைத்து விதை மாதிரிகளுக்கும் விதை ஆய்வுக் கட்டணம் விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/– ஆகும்.

பொதுவாக சான்று விதை மாதிரிக்கு புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புதிறன், பிறஇரகக் கலவன், பிறஇரக விதைகள் பற்றிய ஆய்வுகள் செய்யப்படுகின்றன. ஆய்வாளர் விதை மாதிரிக்குப் புறத்தூய்மை மற்றும் முளைப்புத்திறன் ஆய்வு செய்யப்படுகிறது. பணி விதை மாதிரிக்குப் பெரும்பாலும் முளைப்புத் திறனும், வேண்டுகோளுக்கிணங்க இதர ஆய்வுகளும் செய்யப்படுகின்றது.

எந்த வகையான விதை மாதியாக இருப்பினும், விதைமாதிரி குறித்த விவரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட பிறகே பெறப்படுகிறது. சான்று விதை மாதிரிகள் SATHI (Seed Authentication Traceability & Holistic Inventory) இணைய தளத்திலும், ஆய்வாளர், பணி விதை மாதிரிகள் SPECS (Seed Production Enforcement Certification System) இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டு பெறப்படுகிறது. சமர்ப்பிக்கப்படும் விதை மாதிரி களுக்கு ஆய்வக எண்கள் வழங்கப்பட்டு, வேளாண்மை அலுவலர் களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சமர்ப்பிக்கப்படும் மாதிரிகள் பகுந்துப் பிரிக்கப்பட்டு 400 விதைகள் விதைப்பிற்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. அளவில் பெரிய நிலக்கடலை, பூசணி விதைகள் போன்றவை மணல் தட்டுக்களிலும், அளவில் சிறிய கீரை, தக்காளி விதைகள் கண்ணாடி தட்டுக்களிலும், இடைப்பட்ட அளவைக் கொண்ட நெல், உளுந்து போன்றவை முளைப்புத் தாட்களிலும் விதைப்பு செய்யப்படுகிறது. இந்த 400 விதைகள், 100 விதைகள் 4 முளைப்புத்தாள், 50 விதைகள் 8 முளைப்புத்தாட்கள், 25 விதைகள் 16 முளைப்புத்தாட்கள் என்ற எண்ணிக்கையில் விதைப்பு செய்யப்படுகிறது.

உரிய கணக்கீட்டுக் காலம் வரை விதை முளைப்புத்திறன் அறையில் வைத்து பராமரிக்கப்படுகிறது. இந்த விதை முளைப்புத் திறன் அறையின் வெப்பநிலை 250 டிகிரி செல்சியசிலும், ஈரப்பதம் 90% சதவீதம் ஒளியளவு 750–1250 லக்ஸ் மீட்டர் என்ற அளவிலும் பராமரிக்கப்படும். கணக்கீட்டுக் காலம் வரை தண்ணீர் மட்டுமே தெளிக்கப்படுகிறது.

பயிர்களுக்கேற்ற காலத்தில் அதாவது விதைப்பு செய்து 5, 7, 9, 14 நாட்களில் முளைப்புத் திறன் கணக்கீடு செய்யப்படுகிறது. இயல்பான நாற்றுகள், இயல்பற்ற நாற்றுகள், கடின விதைகள், உயிரற்ற விதைகள் எனப் பிரித்து கணக்கீடு செய்யப்படுகிறது. உரிய முளைப்புத் திறனை எட்டாதவை மீண்டும் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

விதை மாதிரியின் ஈரப்பதம் ஈரப்பதமானி மூலமாகவும், புறத்தூய்மை புறத்தூய்மை கணக்கீட்டு கருவி மூலமாகவும், பிற இரகக் கலவன் ஒப்பிட்டுச் சரிபார்த்தல் முறையிலும் அளவீடு செய்யப்பட்டு அனைத்து முடிவுகளும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு அறிவிக்கப்படுகிறது.

சான்று விதை மாதிரிகளில் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் முடிவுகளில் தேர்ச்சி பெறாதவை மறு விதை மாதிரி ஆய்விற்கு ஏற்றுக் கொள்ளப்படும் பிற இரகக்கலவன் எனில் தேர்ச்சி பெறாதவைக்கு மறுவிதை மாதிரி ஆய்வு கிடையாது.

ஆய்வாளர் விதை மாதிரிகளில் தேர்ச்சி பெறாதவை துறை சார்ந்த நடவடிக்கை அல்லது நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு கிடைப்பது உறுதி செய்யப் படுகிறது.

விதை ஆய்வகத்தின் சீரிய பணியினை சிறப்பிக்கும் வகையில் மதுரை விதைப்பரிசோதனை நிலையத்திற்கு ஹிபுயஸி அங்கீ காரம் பெறப்பட்டுள்ளது.

தரமான விதைகள் சிறந்த முளைப்புத் திறன் கொண்டிருப்பதால் விதைச் செலவு குறையும். சீரான மகசூல் கிடைக்கும். விதை ஆய்வக முடிவுகளுடன் விதை விற்பனை செய்கையில் நம்பகத் தன்மை கூடும். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் சீரிய பணியில் தொடர்ந்து செயலாற்றி வருவதே விதை பரிசோதனை நிலையத்தின் சிறந்த அங்கீகாரமாகும்.

விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் தங்களிடமுள்ள விதை குவியல்களிலிருந்து விதை மாதிரி எடுத்து மதுரை, நாகமலை புதுக்கோட்டையில் அமைந்துள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் சமர்ப்பித்து விதை மாதிரி ஒன்றுக்கு விதைப் பரிசோதனை கட்டணமாக ரூ.80/- செலுத்தி விதை தரத்தினை அறிந்து கொள்ளலாம் என விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, வேளாண்மை அலுவலர்கள் பெரி.இராமலெட்சுமி மற்றும் சி.கமலாராணி தெரிவித்துள்ளனர்.



கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# நிலக்கடலை விதை வாங்கும் போது கவனிக்க வேண்டியவை



ஆடி பட்டம் விரைவாக வரப் போகிறது. மானாவாரி நிலக்கடலை விதைப்புக்கு விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள். மழை வந்தவுடன் விதை வாங்கிட போகிறார்கள்.

**நிலக்கடலை விதை பருப்பு வாங்கும்போது கவனிக்க வேண்டியவை என்னென்ன?**

1) அருகேயுள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் சான்று பெற்ற நிலக்கடலை வாங்கி அதனை உடைத்து பருப்பாக்கிட வேண்டும். இதற்கு ஒரு ஏக்கருக்கு 200 கிலோ விதை நிலக்கடலை வாங்கிட வேண்டும். சில சமயங்களில் மானியத்தில் கூட வாங்கலாம்.

2) அவரவர் சார்ந்த பகுதி மண்ணின் தன்மைகேற்பவும் உள்ளூர் ரகங்கள்/ உயிர் விளைச்சல் ரகங்களை தேர்வு செய்ய வேண்டும்.

3) பருப்பு வாங்கி விதைக்கும் விவசாயிகள் நல்ல தரமான திரட்சியான பருப்புகளை வாங்கிட வேண்டும்.

4) தேர்ந்தெடுக்கப்பட இரகத்தின் விதைகளை விவசாயிகளிடம் வாங்கும் போது அவை அறுவடை செய்து 45 நாட்களுக்கு மேல் 150 நாட்களுக்குள் உள்ளதா என விசாரித்து வாங்கிட வேண்டும்.

5) நாள்பட்ட நிலக்கடலை பருப்பு (எண்ணெய இறங்கி) ஒரு மித்த முளைப்பு திறனை எதிர் பார்க்க முடியாது.

6) பெறப்பட்ட விதைகளை முளைப்பு திறன் பரிசோதனை செய்ய வேண்டும். குறைந்த பட்சமாக 90% முளைப்பு திறன் இருக்க வேண்டும்.

7) 200 கிலோ நிலக்கடலையை உடைத்தால் 55-80 கிலோ வரை பருப்பு (விதை) கிடைக்கும்.

8) இயந்திரத்தை கொண்டு நிலக்கடலை உடைக்கும் போது கவனமாக இருக்க வேண்டும். சல்லடைகள் கொண்டு சலிக்க வேண்டும் ( 7.2 மி.மீ SIZE) சலித்து நல்ல பருமனான நோய் தாக்காத பெரிய பருப்புகளை தேர்வு செய்ய வேண்டும்.

9) உடைந்து போன சுருங்கிய பிஞ்சு பருப்புகளை விதைக்காக பயன்படுத்தக்கூடாது.

10) பருப்பில் ஒரு கீறல் விழுந்தால் கூட முளைக்காது.

11) ஒரு கிலோ விதைப்பருப்புக்கு 4 கிராம் டி.விரிடியை பயன் படுத்திட வேண்டும். இது விதைகள் மூலமாக கட்டுப்படுத்த கூடிய நோய்களை கட்டுப்படுத்திட உதவும்.

தரமான விதையே நல்ல விளைச்சலுக்கு அடிப்படை. சரியான சான்று பெற்ற விதைகளை வாங்குவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மரவள்ளி பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

சேலம், ஜுன் 23

சேலம் மாவட்டம், பெத்த நாயக்கன்பாளையத்தில் ஜுலை 23 அன்று கோபால புரம் கிராமத்தில் மரவள்ளி பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி நடைபெற்றது.




இப்பயிற்சியில் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர் வீரமணி பேராசிரியர் (Agronomy) மரவள்ளி பயிரில் ஒருங்கிணைந்து பூச்சி மேலாண்மை பற்றியும், பயிர் மேலாண்மை, ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் புதிய ரகங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார்.

மேலும் தோட்டக்கலை வேளாண் அறிவியல் நிலையம், சந்தியூர் முல்லைமாறன் வேளாண் விஞ்ஞானி, விளைநிலம் பாதுகாப்பு இயக்கம் பற்றி எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் ராதா, துறை சார்ந்த திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். மேலும் அவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ராஜ்குமார் மற்றும் பிரியங்கா பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்தனர்.

# சிறுதானியங்களின் சிறப்பு – ஒரு பார்வை

சிறுதானியங்கள் பழந்தமிழர் உணவில் பெரும் பங்கு வகித்தது. பாரம்பரிய உணவு வகைகளில் உடலுக்கு தேவையான ஊட்டச்சத்தினை சிறுதானியங்கள் அளிக்கின்றன. கம்பு, சோளம், வரகு, சாமை, திணை, குதிரைவாலி மற்றும் ராகி ஆகியவை சிறுதானியங்களாகும்.

சிறுதானியங்கள் உடலுக்கு தேவையான அனைத்துச் சத்துகளையும் கொண்டதாகும். இவை அதிக ஆற்றலை தரக்கூடியவை. அரிசி, கோதுமை, போன்ற தானியங்களோடு ஒப்பிடும் போது புரதச்சத்து, நார்சத்து மிகுந்தது. இரும்புச் சத்து, கால்சியம், மெக்னீசியம் மற்றும் விட்டமின்களை கொண்டது. சாமையில் அரிசியை காட்டிலும் ஏழு மடங்கு நார்ச்சத்து உள்ளது. சிறுதானியங்களை நாம் உணவாக எடுத்துக் கொள்ளும் போது நம் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது. சிறுதானியங்கள் சாப்பிடுவதால் சர்க்கரை நோய் உடல் பருமன் இரத்த கொதிப்பு போன்ற நோய்களில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.

தமிழகத்தில் சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் அதிகளவில் சிறுதானியங்கள் பயிரிடப்படுகின்றன. சிறுதானியங்கள் வறட்சியை தாங்கி அனைத்து காலநிலைகளிலும் வளரும். குறைந்த அளவு தண்ணீர் இருந்தாலே போதுமானது குறுகிய காலத்தில் (65-90 நாட்களுக்குள்) அறுவடைக்கு வந்துவிடும். சிறுதானிய சாகுபடியில் பூச்சியும் நோய் தாக்குதலும் குறைவு. மானவாரி சாகுபடிக்கு ஏற்றது. சிறுதானியங்கள் சாகுபடி செய்யும் போது தரமான விதைகளை பயன்படுத்தினால், நல்ல மகசூல் பெறலாம். ஈரப்பதம், புறத்தூய்மை, முளைப்புத் திறன் மற்றும் பிற ரகங்களின் கலப்பு விகிதம் ஆகியவற்றால் விதையின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டவிதைகளின் தரப்படி சிறுதானிய பயிர்களின் முளைப்புத்திறன் 75%, ஈரப்பதம் 12%, எனவும் புறத்தூய்மை கம்பு பயிருக்கு 98% மற்ற இதர சிறுதானிய பயிர்களுக்கு 97% என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விதை பரிசோதனை செய்வதற்கு 25 கிராம் சிறுதானிய விதையை விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்ப வேண்டும். திருச்சி மாவட்டத்தில் விதைப்பரிசோதனை நிலையம் திருச்சிராப் பள்ளி புத்தூர் நால்ரோட்டில் உள்ள ஒருங்கிணைந்த விதைச்சான்று மற்றும் உயிர்ம சான்று வளாகத்தின் கீழ் தளத்தில் செயல்பட்டு வருகிறது. விதை மாதிரி அனுப்பப்படும் போது, அது விதைக் குவியலின் பிரதியாக இருக்க வேண்டும்.

ஒருவர் ஒன்றுக்கும் மேற்பட்ட மாதிரிகளை அனுப்பும் போது, ஒவ்வொரு மாதிரிக்கும் குறியீட்டு எண்கள் வழங்க வேண்டும்.

சுத்தமான பையில் விதை மாதிரிகளை எடுத்து பயிர் மற்றும் ரகத்தின் விவரங்கள் அடங்கிய துண்டு சீட்டு உள்ளே வைத்து அனுப்பலாம்.

ஒரு விதை மாதிரிக்கு ரூ.80 பரிசோதனை கட்டணம் செலுத்த வேண்டும் என திருச்சி மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் ஆ.லீமாரோஸ், வேளாண்மை அலுவலர்கள் ந.சி.அனிதா, இரா.புவனேஸ்வரி ஆகியோர் தெரிவித்துள்ளார்.



# விவசாயிகள் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தில் பயன் பெற விண்ணப்பிக்கலாம்

புதுக்கோட்டை, ஜுன் 23

நடப்பு ஆண்டு குறுவை பருவத்தில் இயந்திரம் மூலம் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தில் பயன்பெற உழவன் செயலி மூலம் முன்பதிவு செய்து பயன் பெறலாம் என புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சு.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்,குறுவை பருவத்தில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்வதை ஊக்கு வித்திடவும், நெல் சாகுபடி பரப்பை அதிகரித்திடவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காத்திடும் வகையிலும் நடப்பாண்டில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தினை தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

அதன்படி புதுக்கோட்டைவட்டாரத்திற்கு நடப்பு 2026-27 ஆம் ஆண்டில் குறுவை பருவத்தில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.4000/- பின்னேற்பு மானியம் வழங்கிட சுமார் 450 ஏக்கர் இலக்கீடு பெறப்பட்டுள்ளது. மேலும் ஏக்கருக்கு ரூ.147.67 மானியத்தில் நுண்சத்து விநியோகத் திற்கு 700 ஏக்கர் இலக்கீடு பெறப்பட்டுள்ளது.

மண் வளத்தினை மேம்படுத்திடவும், மண்ணில் நுண்ணுயிர் களின் பெருக்கத்தினை அதிகரித்திடவும் திரவ உயிர் உரங்கள் விநியோகம் செய்திட ஏக்கர் ஒன்றுக்கு ரூ.60/- மானியம் வழங்கப் படுகிறது. உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களை விநியோகம் செய்திட பத்தாண்டுகளுக்கு மேல் உள்ள ரகங்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.10/- மானியமாகவும், பத்தாண்டுகளுக்கு குறைவான ரகங்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.20/- மானியமாக வழங்கப் படுகிறது. பதினெட்டு வயது நிரம்பிய அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள். சிறு / குறு விவசாயிகள், ஆதி திராவிடர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்களின் ஆதார் அட்டை நகல், வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முன்பக்க நகல், நில உடமை தொடர்பான ஆவணங்கள் ஆகியவைகளை கொண்டு உழவன் செயலி மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம் அல்லது தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர் அல்லது உதவி தோட்டகலை அலுவலர் களை தொடர்பு கொண்டு திட்டத்தில் பயன் பெறலாம் என செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேலை வாய்ப்பு முகாம் 2026




கோயம்புத்தூர், ஜுன் 23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர் நல மையத்தின் சார்பில் இளங்கலை மற்றும் முதுகலை வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறி யியல், வனவியல் மற்றும் பட்டுப் புழுவியல் பயிலும் மாணவர் களுக்கான வேலைவாய்ப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கான துவக்க விழா ஜுன் 23 அன்று அண்ணா அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வரவேற்புரை ஆற்றிய மாணவர் நல மையத்தின் முதன்மையர் முனைவர் கோ.பாலசுப்பிரமணியன் பேசுகையில், இந்த வேலை வாய்ப்பு முகாம் மூலமாக கிடைக்கும் வாய்ப்புகளை மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டு மெனக் கேட்டுக் கொண்டார். முதுநிலைப் பட்டமேற்படிப்பிற்கான முதன்மையர் முனைவர் சி.பாபு, வேளாண் பொறியியல் கல்லூரி முதன்மையர் முனைவர் ப.ராஜ்குமார், தோட்டக்கலை கல்லூரி முதன்மையர் முனைவர் கே.வெங்கடேசன் மற்றும் வேளாண்மைக் கல்லூரி முதன்மையர் முனைவர் என்.வெங்கடேச பழனிச்சாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சத்யம் குழும நிறுவனங்களின் மனிதவள வணிகப் பங்குதாரர் விஜயராகவன் தனது சிறப்புரையில் வேளாண் தொழில் துறையின் தற்போதைய எதிர்பார்ப்புகள் குறித்து விளக்கமளித்து, எதிர்கால பட்டதாரிகள் பெற்றிருக்க வேண்டிய திறன்கள் மற்றும் தகுதிகள் குறித்து எடுத்துரைத்தார்.

வேளாண்மைப் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளைச் சேர்ந்த 1224 மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். இதில் 65 வெவ்வேறு நிறுவனங்கள் 998 பணியிடங்களுக்காக ஆட்களைத் தேர்வு செய்ய உள்ளனர். இந்த முகாம் ஜுன் 24ம் தேதி வரை நடைபெறும். நிகழ்ச்சி துவங்கும் முன், பங்கேற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் தங்கள் தேவைகள், மாணவர்களிடமிருந்து எதிர் பார்க்கப்படும் திறன்கள், பணியின் தன்மை, தொழில் முன்னேற்ற வாய்ப்புகள் மற்றும் சம்பள விவரம் குறித்து மாணவர்களுக்கு விளக்கமளித்தனர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழத்தின் மாணவர் நல மையப் பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் இந்நிகழச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

# கொடுமுடி வட்டாரத்தில் விவசாயிகள் மேளா




ஈரோடு, ஜூன் 23

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரம் வேளாண்மைத் துறை கீழ், செயல்படும் வட்டார தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் சிவகிரி வருவாய் கிராமத்தில் உழவர்களுக்கு விவசாயிகள் மேளா நடைப்பெற்றது.

இந்த விவசாயிகள் மேளாவில் வேளாண் அறிவியல் நிலையம் மைராடா கோபியிலிருந்து வேளாண் விஞ்ஞானி ஜான் பிரபாகரன், வேளாண் பொறியியல் துறை தொழில் நுட்பங்கள் பற்றியும் வேளாண் அறிவியல் நிலைய செயல்பாடுகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். வேளாண் வணிகம் மற்றும் வேளாண் விற்பனைத் துறை க.அபிநயா, வேளாண் உட்கட்டமைப்பு ஒழுங்குமுறை விற்பனை கூட திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

வேளாண் அலுவலர் தனஜெயந்தி, விதை சான்றளிப்பு மற்றும் அங்கக சான்றளிப்பு துறையின் செயல்பாடுகள் மற்றும் விதைப்பண்ணை அமைத்தல் குறித்து விளக்கம் அளித்தார். வேளாண் பொறியியல் துறை அலுவலர் ஹரிஷ், வேளாண்மை பொறியியல் துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி கூறினார். மேலும் உதவி வேளாண்மை அலுவலர் சிவப்பிரியா, விளைநிலம் காப்போம் இயக்கதின் மூலம் சமச்சீரான உர பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் குறித்து விளக்கம் அளித்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரேணுகா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளார்கள் மஞ்சுரேகா, சிதம்பரம் ஆகியோர் செய்திருந்தனர்.


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
தரச் சான்றிதழ் பேப்பரில் மட்டுமல்ல பைப்பிலும்
Rithvik Pipe
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் – விரிவாக்கப் பணியாளர்கள் – விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம்



மதுரை, ஜூன் 23

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டார வேளாண்மைத் துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டம் மூலம் 23.6.26 அன்று தேனூர் கிராமத்தில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் – விரிவாக்கப் பணியாளர்கள் – விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம் பயிற்சி நடைபெற்றது. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை என்பது பூச்சிகளைக் கட்டுப்படுத்த இரசாயன மருந்துகளை மட்டுமே நம்பியிருக்காமல், சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரத்தைப் பாதிப்பில்லாத பல்வேறு முறைகளை ஒருங்கிணைத்துப் பயன்படுத்தும் ஒரு நிலையான அணுகுமுறையாகும்.

இப்பயிற்சிக்கு தொழில்நுட்ப உரை வழங்குவதற்கு மதுரை, வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சுரேஷ், ஆரோக்கியமான மற்றும் பூச்சிகளை எதிர்க்கும் திறன் கொண்ட இரகங்களைப் பயிரிடுதல், பயிர் சுழற்சி (Crop Rotation) முறையைக் கையாளுதல், நிலத்தை முறையாக உழுது, முட்டை மற்றும் கூட்டுப்புழுக்களை அழித்தல், தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை உண்ணும் இயற்கை எதிரிகளான (எ.கா: தட்டான், பொறிவண்டு, சிலந்தி) மற்றும் குளவி ஆகியவற்றை பாதுகாத்தல், விளக்குப் பொறிகள் (Light traps) மூலம் இரவு நேரத்துப் பூச்சிகளைக் கவர்ந்து அழித்தல், மஞ்சள் அல்லது நீல நிற ஒட்டும் பொறிகளை (Yellow sticky traps) வயலில் அமைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

மதுரை மேற்கு வட்டார வேளாண்மை அலுவலர் சுபஸ்ரீ, வேளாண்துறை திட்டங்கள் மற்றும் மானிய விபரங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் வெ.பிரபு விவசாயிகளின் ஒருங்கிணைந்த தனித்துவ அடையாள எண் பதிவு செய்தல், PMKISAN, இயற்கை இடுபொருட்கள் உற்பத்தி ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இப்பயிற்சிக்கு புயூசி டிரஸ்ட் நிறுவனத்தின் பயிற்றுநர் கர்ணன், கலந்து கொண்டு சோலார் விளக்குப்பொறி மூலம் பூச்சிகளைக் கவர்ந்து அழித்தல் மற்றும் செயல்விளக்கம் மூலம் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். சில்ரன் சாரிடபிள் டிரஸ்ட் நிறுவனத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மீனாட்சி சுந்தரம், கலந்து கொண்டு நிறுவனத்தின் மூலம் விவசாயி களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் மற்றும் உதவிகள் குறித்தும், மண்புழு உர உற்பத்தி செய்வது குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை ATMA திட்ட வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர், எஸ்.கே.ராஜசேகர், உதவி தொழில்நுட்ப மேலாளர் பாலமுருகன் மற்றும் பயிர் அறுவடை பரிசோதனை பணியாளர்கள் முரளிதரண் மற்றும் லியோ இன்பெண்ட் ஆகியோர் செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# நிலக்கடலைப் பயிரில் சுருள்பூச்சி மேலாண்மை முறைகள்

## வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை



புதுக்கோட்டை, ஜூன் 23

நிலக்கடலை சாகுபடி மேற்கொள்ளும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் நிலக்கடலைப் பயிரினைத் தாக்கும் சுருள்பூச்சிகளை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்திடலாம் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சு.சுந்தரமகாலிங்கம் ஆலோசனை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலைப் பயிரில் சுருள்பூச்சிகளின் தாக்குதல் காணப்படுகிறது. இதனை ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைக் கடைபிடித்து கட்டுப்படுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### தாக்குதல் அறிகுறிகள்

சுருள்பூச்சிப் புழுக்கள் இலைகளைத் துளைத்து உண்ணும். இப்புழுக்கள் தொடக்கத்தில் நடுநரம்பில் துளையிட்டு அதனுள் இருக்கும். பின்பு வளர்ந்த புழுக்கள் இலைகளைச் சுருட்டி அதனுள் புகுந்துகொண்டு பச்சையத்தைச் சுரண்டிச் சேதம் விளைவிக்கும். தீவிரத் தாக்குதலுக்குண்டான செடிகள் காய்ந்தும் சுருங்கியும் காணப்படும். இதனால் பாதிக்கப்பட்ட வயலைத் தொலைவிலிருந்து பார்த்தால் எரிந்து காய்ந்தது போல் காணப்படும்.



### சுருள்பூச்சி மேலாண்மை முறைகள்

நிலக்கடலைப் பயிரில் ஊடுபயிராகத் தட்டைப்பயறு அல்லது உளுந்துப் பயிரை 4:1 என்ற விகிதத்தில் விதைக்க வேண்டும். ஏக்கர் ஒன்றுக்கு விளக்குப்பொறி 5 எண்கள் வீதம் மாலை 7 மணி முதல் இரவு 11 மணி வரை வைத்துத் தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்தழிக்கலாம். டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் என்கிற முட்டை ஒட்டுண்ணியை ஏக்கர் ஒன்றுக்கு 20,000 எனும் அளவில் 7 முதல் 10 நாட்கள் இடைவெளியில் இருமுறை வெளியிட்டுக் கட்டுப்படுத்திடலாம். செடி ஒன்றுக்கு 2 முதல் 3 புழுக்களுக்கு மேல் தென்பட்டால், அதாவது பொருளாதார சேத நிலையினைத் தாண்டும்பொழுது ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் இமாமெக்டின்பென்சொயேட் என்ற மருந்து 100 கிராம் அல்லது ஸ்பினோசாடு 45 எஸ்.சி. 80 மி.லி. என்ற அளவில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

மேலும் விவசாயிகள் உழவன் செயலியில் பூச்சிநோய் கண்காணிப்பு என்ற பகுதியில் பயிர் பாதிப்பினைப் புகைப்படம் எடுத்து அனுப்பினால் விவசாயிகளுக்குப் பயிர் பாதுகாப்பு மேலாண்மை முறைகள் விவசாயியின் அலைபேசிக்குக் குறுஞ் செய்தி மூலம் அனுப்பி வைக்கப்படும். எனவே விவசாயிகள் இந்த வாய்ப்பினையும் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு சுருள்பூச்சியினைக் கட்டுப்படுத்திட ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்து நிலக்கடலை பயிரில் அதிக மகசூல் பெற்றுப் பயன்பெறுமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சு.சுந்தரமகாலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.




# மக்காசோளத்தில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் –விரிவாக்க அலுவலர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம்

மதுரை, ஜுன் 23

மதுரை மாவட்டம், சேடபட்டி வட்டாரத்தில் மங்கள்ரேவு கிராமத்தில் வேளாண்மைத் துறை – வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் (யுவுஆயு–2026–27) மக்காசோளத்தில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் – விரிவாக்க அலுவலர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம் 23.06.26 அன்று நடத்தப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குநர் கா.மணிமேகலை கலந்து கொண்டு மத்திய மற்றும் மாநில திட்டங்கள் பற்றியும் மற்றும் உயர் விளைச்சல் இரகங்கள் பற்றியும் எடுத்துகூறி விதை தேர்வு ,விதை நேர்த்தி, விதைக்கும் முறை, நிலம் சிரமைப்பு பற்றி எடுத்த கூறினார். வேளாண்மை கல்லூரி, மதுரை டாக்டர் கே.ஜோதி லட்சுமி, உதவி பேராசிரியர், கூறுகையில் சமச்சீரான உரபயன் பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் மற்றும் இயற்கை உரங்களை பயன்படுத்தி பூச்சி, நோய் தாக்குதலின்றி இயற்கை முறையில் அதிக மகசூல் பெற்றிடலாம். விளை பொருட்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்திட வேண்டும் என்று கூறினார்.

பெருமாள், துணை வேளாண்மை அலுவலர், மண்பரிசோதனை செய்வதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், மண் எடுக்கும் வழிமுறைகள் பற்றியும் சாகுபடி செலவை குறைப்பதும் காலநிலை மாற்றத்தை எதிர் கொள்ள பசுந்தாள் மற்றும் பசுந்தலை உரங்களை பயன்படுத்தவும், பயிர் சுழற்சி முறைகளை பற்றி விவசாயிகளுக்கு எடுத்தரைத்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் ச.கணேசராஜா கலந்து கொண்டு பதினாறு வகையான சத்துகளை எடுத்துக்கூறி உரமிடுமுறை பற்றிய தொழில்நுட்பங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் பிரித்திவிராஜ் பேசுகையில் அறுவடை பின்செய் நேர்த்தி பற்றியும் சேமிப்பு முறைகள் ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் பற்றி எடுத்தக் கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சத்யா, விவசாயிகளுக்கு தனித்துவமான அடையாள அட்டை பதிவு செய்வது பற்றி எடுத்துக்கூறி ஏற்பாடுகளை செய்தார். வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ச.கணேசராஜா நன்றி கூறினார்.

# பயிர்களும் பட்டங்களும் – ஒரு பார்வை

பட்டம் என்பது காலநிலையின் குறியீட்டு வார்த்தை ஆகும். பட்டத்துக்கு ஏற்றவாறு பயிர் செய்வது அவசியம். ஒரு பயிர் சாகுபடி செய்த நிலத்தில் மீண்டும் அதே பயிரை சாகுபடி செய்தால் நிலத்தின் வளமும், மகசூலும் குறைய வாய்ப்பு உள்ளது. மாற்றுப்பயிர்களை விளைவிக்கும் போது முந்தைய பயிர்களின் கழிவுகள் எருவாகப் பயன்படுவதோடு முந்தைய பயிர்களின் நோய்களும் எளிதில் தாக்குவதில்லை. நோய் களும், நோய்க்கிருமிகளும் பயிருக்குப் பயிர் வேறுபடுகின்றன. குறிப்பிட்ட கால இடைவெளிக்கு பின்னால் வேறொரு பயிர் சாகுபடி செய்த பிறகு மீண்டும் பழைய பயிர் சாகுபடி செய்வதால் எந்த பாதிப்பும் ஏற்படுவது இல்லை.இடைக்காலத்தில் அவை பெரும்பாலும் அழிந்து விடுகின்றன.

**பயிர்களுக்கு ஏற்ற பட்டங்கள்**

**ஜனவரி (மார்கழி, தை)**

கரும்பு, சுரைக்காய், மிளகாய், பாகற்காய், பூசணிக்காய், முள்ளங்கி, கீரைகள், வெங்காயம், கொத்தவரை, கத்தரி, அவரை.

**பிப்ரவரி (தை, மாசி)**

வெண்டை, கத்தரி, தக்காளி, மிளகாய், சுரைக்காய், கொத்த வரை, பீர்க்கங்காய், அவரை, சூரியகாந்தி, உளுந்து, கம்பு, கரும்பு, பருத்தி, கீரைகள்

**மார்ச் (மாசி, பங்குனி)**

வெண்டை, பாகற்காய், தக்காளி, கோவைக்காய், பீர்க்கங்காய், சூரியகாந்தி, உளுந்து, கம்பு, சோளம், பருத்தி, கத்தரிக்காய்.

**ஏப்ரல் (பங்குனி, சித்திரை)**

செடி முருங்கை, கொத்தவரை, வெண்டைக்காய், புடலை, பாகற்காய், அவரை, எள், கம்பு, சோளம்.

**மே (சித்திரை, வைகாசி)**

செடி முருங்கை, கத்தரிக்காய், தக்காளி, வெங்காயம், அவரை, எள், சோளம், நிலக்கடலை.

**ஜூன் (வைகாசி, ஆனி)**

கொத்தவரை, கத்தரிக்காய், தக்காளி, கீரைகள், வெண்டைக் காய், தேங்காய், நிலக்கடலை.

**ஜூலை (ஆனி, ஆடி) :** மிளகாய், பாகற்காய், சுரைக்காய், பூசணிக்காய், முள்ளங்கி, வெண்டைக்காய், கொத்தவரை, தக்காளி, சூரியகாந்தி, உளுந்து, தேங்காய், காராமணி, துவரம் பருப்பு, மொச்சை, பச்சைபயறு, நிலக்கடலை.

**ஆகஸ்ட் (ஆடி, ஆவணி)**

முள்ளங்கி, பீர்க்கங்காய், பாகற்காய், வெண்டைக்காய், சுரைக் காய், அவரை, கத்தரிக்காய், மிளகாய், பருத்தி, பச்சைபயறு, துவரை, மொச்சை, நிலக்கடலை.

**செப்டம்பர் (ஆவணி, புரட்டாசி)**

செடி முருங்கை, கத்தரிக்காய், முள்ளங்கி, கீரைகள், பூசணிக் காய், புடலை, அவரை, மிளகாய், நெல், பருத்தி.

**அக்டோபர் (புரட்டாசி, ஐப்பசி)**

செடி முருங்கை, கத்தரிக்காய், முள்ளங்கி, கொத்தவரை, நெல்.

**நவம்பர் (ஐப்பசி, கார்த்திகை)**

செடி முருங்கை, கத்தரிக்காய், மிளகாய், முள்ளங்கி, கொத்த வரை, சூரியகாந்தி, நெல், தேங்காய், கரும்பு, வாழை, மரவள்ளி.

**டிசம்பர் (கார்த்திகை, மார்கழி)**

வாழை, கத்தரிக்காய், சுரைக்காய், தக்காளி, பூசணிக்காய், நெல், தேங்காய், மரவள்ளி.

ஒவ்வொரு காலநிலையையும் எதிர்கொண்டு நன்முறையில் வளரும் பயிர்களைத் தேர்வு செய்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும் தொடர்ச்சியாக ஒரே பயிரை சாகுபடி செய்யா மல், அவ்வப்போது பயிர் சுழற்சி முறையில் பயிர்களை மாற்ற வேண்டும். பயிரிடும் விதை நல்ல தரமானதாக இருத்தல் அவசியம். விதையின் தரத்தை பரிசோதிக்க அந்தந்த மாவட்டங் களில் உள்ள விதை பரிசோதனை நிலையங்களில் ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/– கட்டணத்தை செலுத்தி விதையின் தரத்தினை அறிந்த பின் விதைப்பது நல்லது என வேலூர் விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் மு.சண்முகப் பிரியா தெரிவித்துள்ளார்.


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741